ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක **2282/56 -** 2022 ජූනි මස 02 වැනි බ්‍රහස්පතින්දා **- 2022.06.02**

2282/56 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: KDS/PHT/4/6/1/11.
காணி அமைச்சின் இல.: 4-3/18/2018/WS/465.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாத்த ஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் பிரிவில், இல. 986, பின்னகொல்ல கிராம அலுவலர் பிரிவில், பூடாவத்த கிராமத்தில் அமைந்த, நில அளவையாளர் நாயகத்தின் சார்பாக கண்டி பிராந்திய சிரேஷ்ட நில அளவை அதிகாரியினால் அளந்து 2022.02.24 ஆந் திகதியிடப்பட்டு அனுமதி பெற்ற மஹ 7155 இலக்கம் கொண்ட ஆரம்ப வரைபடத்தில் காணித்துண்டிலக்கம் 1, 2 மற்றும் 3 எனக் குறிப்பிடப்பட்டுள்ள "கிரிபோவ மற்றும் பின்னகொல்ல" என்னும் காணித் துண்டுகளில், சுமார் 0.0486 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித் துண்டுகள் மூன்று.

**1. துண்டு இல. 1; காணியின் பெயர்: "கிரிபோவ"; உரிமை கோருபவர்: எச். ஜி. சோமரத்ன அவர்கள், இல. C/A/7/13, ரன்பொக்குணகம, நிட்டம்புவ மற்றும் இன்னும் சிலர்; விஸ்தீரணம்: 0.0041 (1.6 பர்சஸ்) ஹெக்டயார்.**

வடக்கு: எச். ஜி. சோமரத்ன மற்றும் இன்னும் சிலர் உரிமைகோரும் கிரிபோவ மற்றும் பாதை; கிழக்கு: ஆரம்ப வரைபட இலக்கம் மஹ 2432 இல் காணித் துண்டிலக்கம் 62; தெற்கு: ஆரம்ப வரைபட இலக்கம் மஹ 2432 இல் காணித் துண்டிலக்கம் 62; மேற்கு: எச். ஜி. சோமரத்ன மற்றும் இன்னும் சிலர் உரிமை கோரும் கிரிபோவ.

**2. துண்டு இல. 2; காணியின் பெயர்: "பின்னகொல்ல"; உரிமை கோருபவர்: எச். ஏ. சிசிர ஹெட்டி ஆரச்சி அவர்கள், இல. 37, பின்னகொல்ல, தலாத்து ஓய; விஸ்தீரணம்: 0.0192 (7.6 பர்சஸ்) ஹெக்டயார்.**


*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

வடக்கு: ஆரம்ப வரைபட இலக்கம் மஹ 2436 இல் காணித் துண்டிலக்கம் 63; கிழக்கு: ஆரம்ப வரைபட இலக்கம் மஹ 6857 இல் காணித் துண்டிலக்கம் 1; தெற்கு: ஆரம்ப வரைபட இலக்கம் மஹ 2436 இல் காணித்துண்டிலக்கம் 61; மேற்கு: ஆரம்ப வரைபட இலக்கம் மஹ 2436 இல் காணித்துண்டிலக்கம் 62.

**3. துண்டு இல. 3; காணியின் பெயர்: "கிரிபோவ"; உரிமை கோருபவர்: கே. தனராஜ் அவர்கள், கிரிபோவ, தலாத்துஓய; விஸ்தீரணம்: 0.0253 (10 பர்சஸ்) ஹெக்டயார்.**

வடக்கு: கே. தனராஜ் உரிமைகோரும் கிரிபோவ; கிழக்கு: கே. தனராஜ் உரிமைகோரும் கிரிபோவ; தெற்கு: எம். ஜி. பிரேமரத்ன உரிமைகோரும் தாகே வத்த; மேற்கு: ஆரம்ப வரைபட இலக்கம் மஹ 6857 இல் காணித்துண்டிலக்கம் 1 மற்றும் ஆரம்ப வரைபட இலக்கம் மஹ 2436 இல் காணித்துண்டிலக்கம் 63.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, பாத்த ஹேவாஹெட்ட பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எச். கே. சாகரிகா தில்ஹானி,
பிரதேச செயலாளர்,
பாத்த ஹேவாஹெட்ட .

பிரதேச செயலகம்,
பாத்த ஹேவாஹெட்ட ,
2022, மே 27.

EOG 6 - 0033